# முத்துமாரியம்மன் வரலாறும் வழிபாடும்!..........

இந்தியாவின் நர்மதை நதிக்கு வடக்கே இருக்கும் அடர்ந்த வனத்தில் முனிவர்கள் பலர் அக்காலத்தில் யாகம் செய்து வாழ்ந்து வந்தனர். இம்முனிவர்களில் பிரமாவுடைய மானசீக மைந்தனான பிருகு முனிவரின் வழித்தோன்றலான இருசிகர் என்னும் தவத்தால் சிறந்த முனிவர் ஒருவரும் வாழ்ந்து வந்தார்.

இந்தவனத்தின் இன்னொருபுறத்தில் குசநாபன் என்னும் முனிவரும் .அவருடைய மகனான காதி என்னும் முனிவரும் வாழ்ந்து வந்தனர். காதிக்கு விசுவாமித்திரன் என்னும் மகனும் சத்தியவதி என்னும் மகளும் பிறந்தனர். இந்த விசுவாமித்திரனே பின்னாட்களில் விசுவாமித்திரர் என அழைக்கப்பட்டமாமுனிவர் ஆவார்.

முன்கூறிய இருசிகமுனிவரும் தன்விருப்பத்திற்கமைய சத்தியவதியின் பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் சத்தியவதியை மணஞ் செய்து தன்குடும்பவாழ்க்கையை இனிதே நடத்தி வரலானார். அவர்களுக்கு சமதக்கினி என்னும் மகன் பிறந்தான். சமதக்கினி என்றால் புலன்களை அடக்கியவன் என்றும் யாகங்களைப் புரிபவன் என்றும் பொருளாகும்.

இக்காலத்தில் இன்று பஞ்சாப்எனப்படுவதும் தமிழில் பாஞ்சாலம் என வழங்கப்படும் இடத்திற்கு தென்கிழக்கே “இரேணு”என்னும் அரசன் ஆண்டு வந்தான். ஏழைகள் மேல் அளவில்லாத இரக்கம் காட்டிய இம்மன்னனுக்கு பிள்ளைகளில்லை. இதனால் அவனும்மனைவியும் நாட்டைவிட்டு காட்டிற்குச் சென்று சிவபிரானை நோக்கி பலநாட்கள் தவம் இருந்தனர். இடைவிடாத இவர்களின் தவவலிமையால் மனமிரங்கிய சிவபிரானும் உமாதேவியிடம் “தேவி நீ மலையரசன் மகளாகவும் தக்கன் மகளாகவும் வரவிருக்கிறாய் கங்காதேவியும் ஒரேஇடத்திலே (சிவனின் தலைமுடியில்) தொடர்ந்த அடைக்கப்பட்டுள்ளதால் உலகம் வளம் குறைந்து விடும். எனவே உனது நவசக்திகளில் ஒருவரை கங்காதேவியின் விருப்பத்துடன் பூமிக்கு அனுப்பி எம் அடியவர்களுடைய இடர்களைக்களைந்து தீயோரை அகற்றி நோய்களையும் நீக்கவேண்டும். அவ்வாறு நீ பூமியில் இருக்கும் நாட்களில் தவமுனிவன் ஒருவனுக்கு மனைவியாகி நான்கு மக்களைப் பெறுவாய். அவர்களில் இளையவன் உனது அண்ணனான விஸ்ணுவின் அம்சமாவான. அபாண்டமான குற்றச்சாட்டில் நீ கொல்லப்படுவாய்! ஆனாலும் தீ உன்னை எரிக்காது. அத்துடன் உனது மனித சுபாவமும் அகன்று போகும். .அதன் பின்பு நீ விந்தியத்திற்கு வடதிசையில் சென்று அங்கும் தீயவர்களை அழித்து நல்லவர்களுக்கு அருள்

புரியத் தவமிருப்பாய்! உன்னுடைய தவத்திற்கு நான் வருவேன். அதன் பின் தென்னாடு இலங்கை முதலிய இடங்களுக்கும் கிராமதேவதையகச் சென்று சகலஇடங்களையும் தரிசித்தபின் காஞ்சியிலே கோயில் கொண்ட பின் என்னை வந்நடைவாய்"எனக்கூறியருளினாய்!
உமாதேவியாரும் இரேணுவும் அவன் மனைவியும் தவம்புரிந்த சிந்து நதிக்கரையில் தர்ப்பைப் புற்களின் மேல் குழந்தையாக அவதரித்தார். ஆள்அரவமற்ற காட்டில் குழந்தையின் அழுகுரல் கேட்ட இரேணுவும் தவம் கலைந்து குழந்தையை எடுத்து தன்மனைவியிடம் கொடுத்தான். மனைவியும் குழந்தையை மார்போடுசேர்த்து அணைக்கவும் குழந்தையைப் பெறாத அவளுடைய தனங்கள் இரண்டிலும் பால் சுரந்து வழியத் தொடங்கியது. சுரந்தபாலை குழந்தைக்கு ஊட்டிய இரேணுவும் மனைவியும் குழந்தையை அரண்மனைக்கு கொண்டு வந்து "ஆதிரை" எனபெயர் சூட்டி அன்போடு வளர்த்து வரலாயினர். இவ்வாறு நாளேரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஆதிரை வளாந்து வந்தாள்.

இரேணுவின் ஒரே மகளாக இருந்ததினால் யானையேற்றம் குதிரையேற்றம் தேரோட்டம் என அரசகுமாரர்களின் அனைத்துப் பயிற்சி முறைகளையும் அரசகுமாரியான இவளும் கற்று தேர்ச்சி பெற்றாள். அதோ போல் பெண்களுக்குரிய குடும்ப நிர்வாகம் மற்றும் முனிவர்களுடைய யாகமுறைகள் ஆகிய சகலதுறைகளிலும் சிறப்பாக பயிற்சி பெற்றாள். இரேணுஎன்ற அரசனின் அன்புக்குரிய மகளாதலால் அப்பெயரின் பெண்பாற் பெயரான "இரேணுகை"எனவும் அவள் அழைக்கப்பட்டாள்.

காண்போரைக்கவர்ந்திழுக்கும் கட்டுடல் வாய்த்த அழகுள்ள இரேணுகை திருமணவயதை அடைந்ததும். இருசிகமுனிவருடைய மகனான சமதக்கினிக்கு பெற்றோர் அவளை மணஞ்செய்து கொடுத்தனர். சமதக்கினியாரும் இரேணுகையும் நர்மதை ஆற்றங்கரையிலே புதுவாழ்க்கையை இனிதே நடத்தினார்கள். இவர்களுக்கு தனுவன் அனுவன், விசுவாவசு, பரசுராமன் என்னும் நான்கு புதல்வர்கள் பிறந்தனர். இவர்களில் விஸ்ணுவின் அவதாரமாக கருதப்படும் பரசுராமன் இந்தியாவில் எழுந்த பாரதம் இராமயணம் போன்ற அனைத்து இதிகாசங்களிலும் இன்றும் பேசப்படுகின்றான்!

பிரமதேவனுடைய மானசீகப்புத்திரன் ஆகிய பிருகுமுனிவருக்கு புலோமசை, கியாதி என்னும் இருமனைவியர்கள. இவர்களில் கியாதி கர்த்தமாமுனிவருடைய மகளாவார். இக்காலத்தில் அசுரர்களிற்கு எதிராக மகாவிஷ்ணு போர்புரிந்து கொண்டிருந்தார். இறுதியில் மகாவிஷ்ணு அசுரர்களைத் தோற்கடித்தார். அவரிடம் தோற்றோடிய அசுரர்களிற்கு கியாதி அடைக்கலம் கொடுத்தாள். அதனால் கோபம் கொண்ட விஷ்ணு கியாதியைக்

கொன்று விட்டார். மனைவியை இழந்த பிருகுமுனிவரும் வெஞ்சினம் கொண்டு விஷ்ணுவை "நீ உலகத்தில் பத்துப்பிறவி எடுத்துழல்வாய்" எனச்சாபமிட்டார். இப்படிச்சாபம் பெற்ற பிறவியொன்றிலேயே விஷ்ணு முன்சொன்னவாறு சமதக்கனி முனிவருக்கும் இரேணுகைக்கும் பரசுராமன் என்னும் மகனாகப் பிறந்தார்.

கார்த்தவீரியன் :-

இந்தியாவின் வடக்கிலுள்ள இமயமலையிலிருந்து பிறக்கும் நதிகளில் மிகப்பெரியது கங்கைநதியாகும். அக்கங்கை நதிக்கரையில் இருந்தநாடுகளில் கேகயநாடும் ஒன்றாகும். இந்நாட்டை கிருத்தவீரியன் என்பவன் ஆண்டு வந்தான். இவனை தனகன் என்றும் அழைப்பர். இவனது மனைவி சுகந்தை என்பவளாகும். இவர்களுடைய நகரத்தின் பெயர் மகிஷ்ஷமதி. இவர்களுடைய மகன் கார்த்தவீரியன் ஆவான். ஆயிரம் கைகளை உடையவன் எனவர்ணிக்கப்படும் இவன் தந்தைக்குப்பின் கேகயநாட்டு அரசனானான். அரசனாகவும் வீரனாகவும் இருந்தமையால் நாட்டில் இருக்கும் அழகான பெண்களையெல்லாம் மனைவியாக்கி தனது அந்நப்புரத்திலிருத்தும் காமலோகனாகவே இருந்தான். இக்காலத்திலேயே இலங்கையில் சிவபக்தனான இராவணன் ஆண்டு வந்தான். பத்துத்தலையுள்ள தன்னைவிட இந்த உலகத்தில் வேறெருவன் பலசாலியாக இருக்கக்கூடாது என்ற கர்வத்தினால் இராவணனும் கார்த்தவீரியனை தேடிச்சண்டையிட்டான். இவ்வாறான இராவணனையே வென்று சிறையிலிட்ட பலசாலியே இந்த கார்த்தவீரியனாவான்.

கார்த்தவீரியன் ஆயிரம்கைகொண்ட தனது பலத்தினால் முனிவர்களையும் இம்சிக்கத்தொடங்கினான. இவனது கேகயநாட்டிற்கு அண்மையில் "பார்க்கவர்" என்ற முனிவர் பலமுனிவர்களுடன் இணைந்து "கோமேதக யாகம்" செய்துவரலானார். பசுக்களின் பெயரால் செய்யப்படும் இந்த யாகத்தினைப் பார்க்க கார்த்தவீரியனும் வநதிருந்தான்.

யாகம் முடிவடையும் நேரத்தில் கார்த்தவீரியன் புலி நரி கழுதை ஆமை முதலியவற்றை வெட்டி யாககுண்டலத்தில் எறிந்து யாகத்தைக் குழப்பினான். இதனைக் கண்ட ஏனைய முனிவர்கள் திகைப்படைந்து அச்சம் கொண்டனர். இதனால் கோபம் கொண்ட பார்க்கவமுனிவரும் "இந்த யாகத்தை குழப்புவதற்கு விலங்குகளைப் பிடித்துக் கொண்டு வந்து அவைகளை வெட்டி யாககுண்டலத்தில் இட்ட உனது ஆயிரம் கைகளும் பிராமணன் ஒருவனால் அழியக்கடவது" என கார்த்தவீரியனுக்கு சாபமிட்டிருந்தார்.

ஆபஸ்தம்பர் என்னும் முனிவரும் அவரைச்சார்ந்த வேறுமுனிவர்களும் இன்னெரு காட்டில் வாழ்ந்து வந்தனர். யோக மார்க்கங்களைக் கற்பதற்கு ஏனையமுனிவர்கள் ஆபஸ்தம்பமுனிவரின் பர்ணசாலைக்கு செல்வது வழக்கம. இக்காலங்களில் முனிவர்களுடைய பத்தினிமார் பசுக்களைப்பாரமரிப்பது, சமையல்செய்வது, நர்மதைஆற்றில் நீராடுவது என தமது பொழுதைக்கழிப்பார்கள. ஒரு நாள் வேட்டைக்கு சென்ற கார்த்தவீரியன் அப்பெண்களைக் கண்டதும் அவர்களை வழமைபோல தனது காமவேட்கைக்கு இரையாக்கினான். இதனைத்தடுக்க வந்த முனிவர்களையும் இம்சித்தான். கோபம் கொண்ட ஆபஸ்தம்ப முனிவர் "உன்னை நான் கொல்லுவது எனக்கு பாவமாகும். ஆனால் நீ செய்த கொடுமைகளுக்கு பதிலாக எதிர்காலத்தில் உனது சிரம்(தலை) பரசுராமனால் அறுக்கப்படும்""என சாபமிட்டார்.

இவ்வாறு முனிவர்களின் யாகங்களைக் குழப்பி அவர்களின் மனைவிமாரை சிறைப்பிடித்து. மமதை கொண்ட கார்த்தவீரியன் ஒருநாள் சமதக்கனி முனிவரின் ஆச்சிமத்திற்கு வந்து சேர்ந்தான். களைப்போடு வருகின்ற அரசனையும் அவன் பரிவாரங்களையும் இந்திரனால் தனக்கு அளிக்கப்பட்ட "காமதேனு" என்னும் பசுவின் மூலம்முனிவரும் அறுசுவை விருந்தளித்தார். கார்த்தவீரியனும் தனக்கு உணவு அளித்த காமதேனுவை கவரநினைத்து முனிவர் வெளியில் சென்ற சந்தர்ப்த்தைப் பயன்படுத்தி காமதேனுவை கயிற்றினால் பினைத்து அதனை தன்னுடன் கொண்டுசெல்ல முயன்றான. இவர்கள் கயிற்றால் காமதேனுவை பிணிக்க முயன்றபோது துள்ளிப்பாய்ந்த காமதேனு கொம்பினால் முட்டியும் கால்களால் மிதித்தும் பலரைக் கொன்றது. இச்சத்தம் கேட்டு ஆச்சிரமக்குடிலில் இருந்த சமதக்கினி முனிவரின் மனைவியான இரேணுகை தலையைநீட்டி எட்டிப் பார்த்ததாள். இரணுகையின் அழகான முகத்தைக்கண்ட கார்த்தவீரியன் அதுவரை நடந்தது எல்லாவற்றையும் மறந்து எப்படி யாவது இரேணுகையை அடைந்து விட வேண்டுமென்ற ஆவலுடன் அவ்விடத்தை விட்டகன்றான.

அடுத்த நாள் அதிகாலையிலேயே இரேணுகை நர்மதையாற்றில் நீராடச் செல்லும் வழியில் அழகிய உருவமுடையவனாக உருமாறி நின்றான. எவருடைய முகத்தினையும் ஏறெடுத்துப்பார்க்காத இரேணுகை பூமியைப்பார்த்தவாரே நதிக்கு சென்று நீர் மென்று திரும்பி விட்டாள. இதோ போல அடுத்த நாளும் அவளின் கவனத்தைக் கவரமுடியாமல் போனவன் மூன்றாம் நாள் அமைதியாக சலசலத்தோடும் நர்மதையாற்றில் இரேணுகை இறங்கவும் அவ்விடத்துக்கு மேலாக ஆகாயத்தில் அழகான சித்திரசேன் என்னும் கந்தர்வனின் உருவத்துடன் பறந்து சென்றான். நிலம் பார்க்கும் கீழ்நோக்கிய பார்வையுடன் ஆற்றில் இறங்கிய இரேணுகையின் கண்களில்

அவனுடைய பிம்பம் தென்பட்டது. சிலகணம் வியப்புடன் இதைப்பார்த்த இரேணுகை சற்று அறிவு தடுமாறினாள். சுயஉணர்வு வரப்பெற்ற இரேணுகை பிற ஆடவனை தான் நோக்கியது தவறென உணர்ந்து கவலையுற்றவளாய் குடத்தினில் நீரை மென்று கொண்டு ஆச்சிரமத்திற்கு திரும்பினாள்.

இரேணுகை ஆச்சிரமத்துக்குள் வரவும் துயிலெழுந்து சமதக்கனி முனிவர் குடிலைவிட்டு வெளியே வந்தார். மனமும் முகமும் வாடியிந்த இரேணுகையைக் கண்டதும் தனது தவவலிமையால் நடந்ததை தெரிந்து கொண்ட முனிவர். பிறஆடவனை இச்சித்த மனைவி மீது கோபம் கொண்டார்.

தனது பிள்ளைகள் நால்வரையும் கூவியழைத்த அவர் தாயின் தலையை வெட்டுமாறு பிள்ளைகளைப் பணித்தார். தனது கட்டளைக்கு பணியமறுத்த தனுவன் மனுவன் விசுவாசு ஆகியோரைக் காட்டில் நரிகளாக அலையுமாறு சாபமிட்டார். இறுதியில் இளையவனான பரசுராமனை அழைத்து "உனதுதாய் கற்பு நெறி தவறிவிட்டாள். இன்று அவள் வேறெரு ஆடவனை இச்சித்ததாள். எனவே இவளது தலையை வெட்டிவா" எனக்கட்டளையிட்டார்.

தந்தையின் சொல்லை மீறி அவரின் கோபத்திற்கு ஆளகுவதா? கேள்விகள் மனதைக் குடையவே தாய்மேல்லுள்ள அன்பும் பாசமும் அவனைவருத்தின. இதனைக்கண்ட இரேணுகை தன் தனையனை நோக்கி.
"மகனே தந்தை சொல்மிக்க மந்திரமில்லை அவர் சொல்லைத்தட்டாதே முன்பு பிருகுமுனிவர் இட்ட சாபத்தினால் விஷ்ணுவாயிருந்த நீ மனிதனைப்போல உருமாறினாய். மனிதனைப்போலவே இன்று யோசிக்கின்ராய் அப்படி யோசிக்காதே! என்னை வெட்டி விடு அப்படியானால் நான் பதிவிரதையாவேன்" எனக்கூறிஅவன் மனதை மாற்றினாள்

பரசுராமன் தாயை அழைத்துக் கொண்டு கொலைக்களமுள்ள காட்டைநேக்கி நடக்கத் தொடங்கினான. இதனைக்கண்ட ஏனைய இருடிகள் என்னும் முனிவர்களும் அவர்களது பத்தினிமாரும் பரசுராமனை அப்படிச்செய்ய வேண்டாம் எனக்கூறித் தடுத்தனர். பரசுராமனே தன் பெற்றேரின் விருப்பத்தை நிறைவேற்றுவதே தனத கடமை எனக்கூறி அவர்களின் தடைகளை மீறி கொலைக்களத்திற்கு தன் தாயை அழைத்துச் சென்றான. இருடிகளும் அவர்களது பத்தினிகளும் அவன் செயலைத் தடுக்க முயன்றவாறே அவர்களும் கொலைக்களம் சென்றனர். அவ்வாறு சென்றவர்கள் பரசுராமனின் செயலைத் தடுக்கும் முயற்சியில் அவனை அடிக்கவும் முற்பட்டனர். கோபம் கொண்ட பரசுராமன் தனது வாளினால் அவர்களது தலைகளை வெட்டி எறிந்தான. அவ்விடத்தில் சீவப்பட்ட தலைகளும் தலையில்லா முண்டங்குளும் எங்கும் பரந்து குவிந்தன. கோபம் கொண்டு மற்றவர்களின் தலைகளை வெட்டிய

பரசுராமனை தாய்ப்பாசம் தொடர்ந்தும் வருத்தியது. தாயின் தலையை வெட்டமுடியாது மீண்டும் தவித்தான.

மகனுடைய தடுமாற்றத்தைப் புரிந்து கொண்ட இரேணுகை "மகனே என்தலையை வெட்டிவிடு உன் தந்தையின் கட்டளை மிகப்பெரியது அதன்படி நடப்பதே உன் கடமை அதனால் அவ்வாறு நீ செய்வதே எனக்கும் திருப்தி ஏற்படுத்தும்" எனப்பலவாறு கூறி அவனை உற்சாகமூட்டினாள்.

கலக்கம் நீங்கிய பரசுராமன் தாயின் விருப்பப்படியே இரேணுகையின் தலையை வெட்டி வீசினான். வெட்டப்பட்டமுண்டமும் உடலும் அங்கிருந்த ஏனைய உடல்களுடன் கலந்து போயின.

தாயினை தனது வாளுக்கு இரையாக்கிய பரசுராமன் கொலைக்களத்திலிருந்து திரும்பி வந்தான். கோபம் தணிந்திருந்த சமதக்கினியாரும் "நான் சென்னபடியே நீயும் தவறாது செய்து வந்துள்ளமையால் நான் மகிழ்வுடன் உனக்கு மூன்று வரங்களைத் தருகிறேன். விரும்பியமூன்று வரங்களைக் கேள் எனக்கூறினார்" இதைக்கேட்ட பரசுராமனும்.

1 எனது சகோதரர்கள்மூவரும் நரி உருவம் மாறி முன்போல மானிடர் ஆக வேண்டும்.

2 தாயின்தவறை மன்னித்துஅவளை முன்போல ஆச்சிரமத்துக்கு அழைதைது வரவேண்டும்.

3 எப்பொழுதும் ஈசனை மறவாத சிந்தனை எனக்கு வேண்டும்.

எனமூன்று வரங்களைக் கேட்டுக் கொண்டார். தந்தையாகிய சமதக்கினி முனிவரும் "தந்தேன் இவ்வரங்கள்" எனக்கூறி ஒருகலசத்தில் நீரினைக் கொடுத்து உன் தாயின் தலையையும் உடலையும் பொருத்தி இந்நீரினைத் தெளித்தால் அவள் உயிர் பெற்று எழுவாள்! எனக் கூறி பரசுராமனுக்கு மழுவொன்றையும் கொடுத்தருளினார்.

கலசநீரினைக் கொண்டு கொலைக்களத்துக்கு விரைந்த பரசுராமன் சந்தேகத்திற்கு இடமின்றி தாயின் தலையைக் கண்டு பிடித்தார். ஆனால் எவ்வளவு தேடியும் ஏனைய உடல்களுடன் உடலாக கலந்துவிட்டதாயின் உடலைக் சரியாக அடையாளம் காண முடியவில்லை. அதனால் தாயின் உடல் போலிருந்த ஓர் உடலுடன் தனது தாயின் தலையை இணைத்து தந்தை கொடுத்த கலசத்து நீரை தெளிக்கவும் உறக்கத்திலிருந் எழுவது போல இரேணுகையும் எழுந்து வந்தாள்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடந்தபின். மீண்டும் நர்மதை ஆற்றங்கரையில் சமதக்கினியாரின் ஆச்சிரமும் முன்பு போலவே இயல்பாக நடந்து வந்தது. சமதக்கினியாரும் இரேணுகையும் மக்களிற்கு முன் கணவன் மனைவி போல நடந்து கொள்பவராயினும் தனிமையில் முற்றும் துறந்த முனிவர்கள் போலவே நடந்து வந்தனர்.

சிலகாலங்கள் இவ்வாறு கழிந்துவிட்ட நிலையில் இரேணுகையி மேற்கொண்ட ஆசைநிறைவேறாத நிலையில் காமம்மேலிட மீண்டும் கார்த்தவீரியன் முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தான். அந்த நேரம் தனித்திருந்த இரேணுகையின் கைகளைப்பற்றி இழுத்தான். திமிறிய இரேணுகை அவனுடன் போரடிக் கொண்டிருக்கும் வேளையில் ஆச்சிரமத்துக்கு வந்த சமதக்கினியார் இரேணுகை கொடுத்த வாளினால் கார்த்தவீரியனின் கைகளை வெட்டியெறிந்தார். இதன் பின் அவ்விடத்திற்கு வந்த கார்த்தவீரியனின் மக்கள் சமதக்கினியாரை வெட்டிக் கொன்றனர்.

சற்று நேரத்தின் பின் நைமிசாரணியத்திற்கு சென்றிருந்த பரசுராமன் ஆச்சிரமத்துக்கு திரும்பி வந்தார். வரும் வழியிலேயே தாயின் அழுகுரலைக்கேட்டு விரைந்து வந்த அவர்தந்தையாகிய சமதக்கினியார் இறந்து கிடப்பதையும் தாயாரும் சகோதரர்களும் அழுதுபுலம்புவதையும் கண்டார். துக்கம் ஒருபுறமும் கோபம் மறுபுறமாக நடந்ததை அறிந்து கொண்ட அவரிடம் இரேணுகை தான் காத்தவீரியனுடன் போராடும் போது அவன் மூன்று கைகளால் ஏழுமுறை தனது மார்பில் அடித்ததையும் கூறினாள. இதைக்கேட் பரசுராமன் அரசகுடும்பங்கள் எங்கிருந்தாலும் மூவேழு இருபத்தியொரு தலைமுறைகளுக்கும் அவற்றை அழிப்பேன் என பிராமணனான பரசுராமரும் சபதம் செய்து கொண்டார். பின்னர் கார்த்தவீரியனைச் தேடிச்சென்று மலைக்குகையினில் ஒளிந்திருந்த அவனை தனது மழுவினால் மார்பைப்பிளந்து கொன்றார்.

கொல்லப்பட்ட சமதக்கினியாரின் உடலை ஏந்திச் சென்று சந்தன விறகினால் அதற்கு சிதைமூட்டி வேத விதிப்படி நடத்த வேண்டிய ஈமக்கிரிகைகளைச் செய்தபின். இறுதியில் சிதைக்கு தீமூட்டிய பரசுராமரும் நர்மதைநதியில் நீராடச்சென்றார்.

அல்லலே பெண்ணெனப் பிறத்தல் ஆங்கதின்
அல்லலே இளைமையிற் சிறத்தல் ஆங்கதின்
அல்லலே கட்டழ குடமை ஆங்கதின்

அல்லலே யிரவலர் சார்பின் ஆகுதல்
காஞ்சிப்புராணம்

என அரற்றிய இரேணுகையும் கணவனுடன் உடன் கட்டை ஏறி உயிர்விடுதலே தகும் என எண்ணி எரிந்த கொண்டிருந்த சமதக்கினியாரின் சிதையின்மீது துள்ளிஏறித் தனது கணவனுடைய உடலைதழுவிக் கொண்டாள். எனினும் அப்பொழுதும் அவள் குளிர்ந்த நீரில் நீராடுபவள் போல மகிழ்வுடன் தீச்சுவாலைக்குள் காணப்பட்டாள. தீயின் வெப்பத்தை அவள் உடல் உணரவில்லை. ஆயினும் அவளுடைய ஆடைகள் யாவும் எரிந்து போயின.

சமதக்கினியாரின் தவத்தையும் இரேணுகையின் கற்பின் சிறப்பையும் அறிந்து கொண்ட தேவர்களின் தலைவனான இந்திரன். எதையும் எரித்து விடும் தீயில் இருந்த இரேணுகையைக் காப்பாற்ற எண்ணினான். உடனே மழைத்தெய்வமான "வருணபகவானை" அழைத்து இரேணுகையுடைய உடல் வெந்து போகும் முன் அவளைக் காப்பாற்ற வேண்டினான். வருணபகவானும் ஏழுமேகங்களையும் சமதக்கினியாரின் சிதைமீது சோனாமாரியாக மழைபொழிய கட்டளையிட்டான். கங்கையின் பிரவாகம் போல் சோவெனப் பொழிந்த மழையில் ஈமத்தீயும் அணைந்து போனது. இரேணுகை சிதையிலிருந்து எழுந்து வந்தாள். ஆடைகள் எரிந்த நிலையில் தனது உடலை மறைப்பதற்காக அங்கு நின்ற வேப்பமரத்தின் இலைதழைகளை பிடுங்கி மார்பினையும் இடையினையும் மூடிக்கொண்டாள். நெருப்பில் இருந்ததனால் அவளின் உடல் கருகிப் போனதுடன் ஆங்காங்கே எரிகொப்பளங்களும் ஏற்பட்டிருந்தன. ஆளேஅடையாளம் தெரியாத நிலையில் தென்திசை நோக்கி நடந்து சென்றாள்.

இந்நிலையில் நீராடிய பின் தமது ஆச்சிரமத்துக்கு திரும்பிய பரசுராமன் தாய் இரேணுகையும் தந்தையுடன் உடன்கட்டை ஏறிவிட்டாள் எனமனம் வருந்தினார். பெற்றோருக்காக தான் செய்த சபதப்படி அரசகுலத்தினரைவெட்டி அவர்களுடைய இரத்தத்தை நதிபோல ஓடவிட்டு இரத்தம் நிறைவதற்கு ஐந்துமடுக்களை உண்டாக்கி அவற்றிலே இரத்தத்தை நிரப்பி அந்த இரத்தத்தை இரண்டுகைகளாலு அள்ளிதர்ப்பணம் செய்தல் வேண்டும். என எண்ணியவாறே அங்கிருந்து சென்றார்.

சிலகாததூரம் சென்ற பின் சேரி ஒன்றைக் கண்டு அதனை நோக்கி நடந்தாள. இவள் சேரியை நெருங்கவம் பெருமழை பெய்தது வேப்பிலையை ஆடையாகக் அணிந்திருந்த இவளைக் கண்ட அச்சேரி மக்கள் இவள் அருகே வரப்பயந்து துரத்திலேயே நின்று இவளைப்பார்த்தனர். அவர்களின் பயத்தைப் புரிந்து கொண்ட இரேணுகை அவர்களைப் பயப்பட வேண்டாம் தான் மனிதப் பெண் என்றும் தனக்குப் பசிப்பதால் உணவு தருமாறும் அவர்களை வேண்டினாள்.

அவர்களே தாங்கள் புலையர் வம்சத்தை சேர்ந்தவர்களென்றும் அவ்வாறான தங்களிடம் உயர்சாதியினர் உணவு உட் கொள்ளுதல் பாவமென்றும் வேதங்களும் சாத்திரங்களும் கூறுவதால் நெருப்பிலே வேகாத பச்சரிசி, மா, வெல்லம், போன்றவைகளை புதிய மட்பாண்டத்தில் வைத்து அவளை வணங்கி அவ்விடத்தை விட்டு விலகிச்சென்றனர். பசியோடு இருந்த இரேணுகையும் அச்சேரிப்புலையர் கொடுத்த நேருப்பிலே வேகாத உணவுகளைக் உண்டு பசியாறினாள். அன்றிரவை அவள் அச்சேரியிலேயே கழித்தபோது அங்குபெரு மழைபெய்து பல நாட்களாக வரட்சியுற்றிருந்த அவ்விடத்தில் மரஞ் சொடி கொடிகள் எல்லாம் புதிர்தளிர் விட்டு பூத்துக்குழுங்கி அச்சேரியே பசுமையானது.

மறுநாள் அதிகாலையிலேயே அவள் அச்சேரிப் புலையர்களிற்கு நன்றி கூறி விடை கொடுத்து மீண்டும் தென்திசை நோக்கி நடக்கலானாள. சிலகாததூரம் நடந்து மேலும் ஒருசேரிக்கு அருகாமையில் இவள் வரவும் அப்பகுதியில் பல நாட்களாக பொய்த்திருந்த மழையும் பொழியத் தொடங்கியது. மழையுடன் வந்த இரேணுகையைக் கண்ட மக்கள் “இவள் ஒரு தேவதைஎனக்கண்டு” பயந்தனர் அவர்களைப் பயமின்றி இருக்கும் படி கூறிய இரேணுகை வேப்பிலை மூடிய தனது உடலில் உடுப்பதற்கு ஆடையென்றைத் தரும்படி அவர்களிடம் கேட்டாள்.

அவர்களும் துவைத்தெடுத்த புதிய வெண்ணிறச் சேலையை அவளிற்கு கொடுத்தனர். அதனை உடுத்திக்கொண்ட இரேணுகை இப்பொழுது தன் பசிதீhக்க உணவு கேட்டாள்? அப்பொழுது அவர்கள் தாங்கள் ஏழை வண்ணார் என்றும் தங்களிடம் புதிய உணவு தற்சமயம் இல்லை எனவும் முதல் நாள் சமைத்து உண்ட பின் மீதமுள்ள சோற்றில் தண்ணீh ஊற்றி புதிய மட்கலத்தில் வைத்திருப்பதாகவும் கூறினர்கள். அவ்வாறு வைத்திருக்கும் பழைய சாதத்தில் உள்ள தண்ணீரை வடித்துத் தரும்படி அவர்களிடம் கேட்ட இரேணுகைஅதனை மகிழ்வுடன் அருந்தினாள். அப்பழங்சோற்று நீரை அவள் அருந்தவும் அவளுடைய உடலில் இருந்த எரிnகாப்பளங்கள் மறையத் தொடங்கின.

அச்சேரி மக்களான சலவைத் தொழிலாளர்கள் அதுவரை தமக்கு கிடைக்காத பெருமழையுடன் வந்த இரேணுகையின் மீதுவாஞ்சனையும் பக்தியும் கொண்டு அவளை தம்முடனேயே இருக்குமாறு வேண்டினர். காட்டு மரங்களினால் பர்ணசாலைபோன்ற சிறு குடில் ஒன்றை அமைத்து பூமியை பசுச்சாணத்தினால் மெழுகிக்கோலமிட்டு வெண்ணிறச் சேலையை அதன் மீது விரித்து வேப்பிலைகளை அதன் மீது பரப்பி அதில்அவளை அமர வைத்தனர். மஞ்சளையும் வேப்பிலையையும் அரைத்து அவளுடைய நெருப்புக் கொப்பளங பூசிவந்தனர். அவளுடைய தீக்கயங்களும் சிறிது சிறிதாய் குணமடைந்தன. தினமும் வேப்பிலை, அறுகு, பூக்கள, மஞ்சள்நீர், பழம், பசும்பால், வெற்றிலை,

பாக்கு, கற்கண்டு, சற்கரை, அரிசி என்பனவற்றை இரேணுகைக்கு தினமும் படைத்து வந்தனர். இரேணுகையின் வருகைக்குப்பின் அம்மக்களிற்கு என்றுமே வரட்சியேயில்லை. அவர்களுக்கான வளமும்பெருகக் அம்மக்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

இரேணுகையின் வரவினால் மகிழ்ச்சியடைந்த அம்மக்களும் அப்பர்ணசாலையையே தங்கள் கோவிலாக்கினர். அம்மக்களும் அருள்பெற்ற இரேணுகையை அங்கேயே வசிக்கும்படி வேண்டினர். அம்மையும் அதற்கு இசைந்து அங்கே உறைபவளானாள்.
அம்மை அங்கே இருந்த காலத்தில் தென்றல் வீச சோலைகளில்இருந்த மரங்கள் தளிர்விட்டு பூத்துக்குலுங்கத் தொடங்கின. மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் என்பனமலர்ந்து மணம்வீசத் தொடங்கின. மரங்களில் சிறியதும் பெரியதுமான பறைவைகள் முட்டையிடுவதற்கு கூடுகட்டின. தேன்கூடுகளிளில் இருந்து தேன் துளிகள் பனிபோல வழிந்தோடியது. குளங்களிலும் நீர் நிலைகளிலும் மற்றும் வயல்களிலும் நீர் நிரம்பி வழிந்தது. தாமரை, நீலோற்பலம, குமுதம், அல்லை, செங்கழுநீர் என நீh நிலைகள் எல்லாம் பூத்துக்குழுங்கின.

“இரேணுகை அம்மை ஒரு தெய்வம” என்றும் அவள் வந்த பின் மாரிமழை பொழிந்ததால் அவளிற்கு மாரியம்மன் எனவும் பெயர் சூட்டி அவ்வாறே அவளை அழைத்து வணங்கினர்.

அச்சேரியிலும் அயலூர்களிலும் வாழ்ந்த குடும்பப்பெண்கள் புதுக்குடத்திலே குளிர்நீரைக் கொண்டு வந்து அம்மனை தினமும் குளிப்பாட்டி குளிர்வித்தனர். இரேணுகை முதலில் புலைச்சேரியில் உண்ட வேகாத பொருட்களாகிய பழம், இளநீர், பானகம, சர்க்கரை, மா என்பனவற்றைப் படைத்து அவளை உண்ணும் படி வேண்டினர்கள். சிலர் அவள் துங்குவதற்காக தாலாட்டுப்பாடினர். பூரணை நாட்களில் அவளிற்க்கு பெருவிழாக் கொண்டாடினர். அவர்களில் சிலர் அவளை மகிழ்விப்பதற்காக அவளுடன் விளையாடினர். அம்மனும் அவர்களுடன் சேர்ந்து விளையாடினாள். பின்னர் நீர்நிலைகளுக்குச் சென்று நீராடினார். அப்பொழுது அவர்களும் அம்மா கோபம் தவிர்த்தருள்க என வேண்டி குளிர்த்திப்பாடல்களைப்பாடினர். அதனைக் கேட்டு இரேணுகையின் உடலும் உள்ளமும் குளிர்ந்தன. அந்த நிலமும் குளிர்ந்தது.

மாரியம்மனும் இவ்வாறே தென்திசைக்கிராமங்களில் திரிந்து அங்கிருந்த பாமர மக்களின் மனங்களைக் குளிர்வித்து வரலானாள். இரேணுகையான அவளிற்கு கணவாரான சமதக்கினியாரின் நினைவு வந்தது. தான் உயிர் தப்பியது போல அவரும் உயிர் தப்பியிருக்கலாம் என எண்ணியவளாய் கணவனின்

பாதக்கமலங்களிக்கு பூசை செய்யும் நோக்கத்துடன் திரும்பவும் நர்மதைக் கரையில் அமைந்திருந்த தமது ஆச்சிரமத்திற்கு வந்தாள. அவள் பூசி மெழுகி அழகான பூமரங்களை வளர்த்த இடம் பாழடைந்து காடு போல் கிடந்தது. கணவராண சமதக்கினியாருடன் தான் உடன் கட்டை ஏறிய இடத்துக்குச் சென்று பார்த்தாள். கணவரை எரித்த சாம்பல் கூட அவ்வித்தில் காணப்படவில்லை. மனம் வருந்தியவளாய் கைலைமலைக்குச் சென்று சிறிய தவச்சாலை ஒனறை அமைத்து அதனுள் இருந்து தனக்கு வரமளித்த சிவபொருமானையும் உமாதேவியாரையும் நேக்கி தவம்புரியலானாள்.

நாட்கள் ஆண்டுகளாக புரண்டோடின. இரும்பாலான கூர்ஆணிகளின் மேல் உயரத்தூக்கிய குவிந்த கரங்களுடன் ஒற்றைக்காலில் நின்று மாரியம்மன்னாகிய இரேணுகை தன்னை வருத்தி இறைவனையும் இறைவியையும் நோக்கி கடுந்தவம் புரிந்து கொண்டிருந்தாள். இதனைக் காஞ்சிபுராணம் பின்வருமாறு வர்ணிக்கிறது.

“ஐயனே யடியேனையும் காத்தருள் அசலத்
தையலே சகமுழுவது மளித்திடும் தாயே
உய்யுமாறென்னைக் காத்தருள் உமைச்சரணடைந்தேன்
பொய்யா சிந்தையிலகப்படீர் போற்றியென்றிருந்தாள்”
காஞ்சி-இரே,28
தனது அம்சங்களின் ஒருவரான மாரியம்மனின் கடுந்தவத்தினால் பொறுமையிழந்த உமாதேவியார் சிவபொருமானை நேக்கி தேவரீர்! எனதுஅம்சமான மாரியம்மன் எம்மைநோக்கி தவம் செய்கிறாளே! அவளுக்கு அருள்பாலிக்கக் கூடாதா? ஏன வினாவினார்?

எல்லாம் அறிந்த சிவபிரானும் உமாதேவியார் சகிதம் மாரியம்மன் முன்தோன்றினார். தனது அம்சத்தில் பரிவு கொண்ட உமாதேவியாரும் உனக்கு யாது வேண்டும்? என மாரியம்மனை வினவினார்?. முhரியம்மனும் யான் உங்களுடனேயே வதிய வேண்டும் எனக் கூறினார். இதைக்கேட்ட சிவபிரானும் அம்மையே நீ உமையவளின் அம்சம். ஏழைஎளிய மக்களின் துயர்துடைப்பதற்காக பூவுலகில் மனிதராய் உருவெடுத்தாய்!. இதனால் அவ்வுலகின் மாசுக்கள் யாவும் அக்கினியால் அழிந்து போயின. நீ தெய்வப் பெண்ணாவாய் உனது தலை மட்டும் பிறந்த அன்று போல் மாறாது உள்ளது. இந்த உடல் வேறு பெண்ணுடையது! இந்த உடலும் பரசுராமன் செய்யும் அந்திமச்சடங்கில் பிரிந்து போகும். உனது தலைமட்டும் எப்பொழுதும் உலகத்தின் கண்களுக்கு தெரியும். அத்தலையை வழிபடுவதும் உனது முழு

உருவத்திற்கு வழிபாடுசெய்வதும் எப்பொழுதம் ஒன்றேயாகும்.! எனக்கூறி உனக்கு என்ன வரம் வேண்டு கேள் எனக் கேட்டார்?

இதைக் கெட்ட மாரியம்மன் சேரிகளிலுள்ள பாமர மக்கள் உங்களை அறிய மாட்டாhகள. அவர்களுக்கு இன்னல் செய்வேரை வருத்தி என்னை வழிபடுவேருக்கு நான் அருள் புரிய விரும்புகிறேன். அதற்கு வரம் அருள வேண்டுமெனக் கேட்டார். சிவபிரானும் நல்லோருக்கு அருள் பாலிக்கும் திறமும் தீயவர்களுக்கு வேதனையளிக்கும் முத்துக்களையும் உமாதேவியாரிடம் வாங்கி மாரியம்மனிடம் கொடுத்தார். அதனைப் பெற்றுக் கொண்ட மாரியம்மனும் இம்முத்துக்கள் யாது செய்யும்? என சிவபிரானிடம் வினாவினாள்?

சிவபெருமானும் “மாரியே நான் சொல்வதைக் கேட்பாயாக உமையவளின் சக்திகளில் ஒன்றான உன்னை நாங்கள் வரம் கொடுத்து பூவுலகத்திற்கு அனுப்புகின்றோம். தீயோரை அழித்து நல்லோரைக் காக்கவும் தேவர்களை இவ்வாறு அனுப்புவோம். அவர்களும் தேவ உருவினை மறைத்து மனித உருவில் நடமாடுவார்கள். உன் மூலமாக கார்த்தவீரியன் போன்ற துட்டர்கள் அழிந்தார்கள். எரியும் சிதையில் ஏறியதால் மனித உருவம் மாறி நீயும் தேவதையாகிவிட்டாய். உன் விருப்பப்படி இந்த முத்துக்களை எடுத்துக் கொண்டு பூமியைச்சுற்றி வா! துட்டர்களைக் கண்டால் முத்துக்களை அவர்கள் மீதுஎறிவாயாக! அவை சமதக்கினியாரின் எரிதணலில் நீபாய்ந்தனால் உனது உடலில் எழுந்த கெப்பளங்கள் போல அவர்களுக்கும் கொப்பளங்கள் உண்டாகட்டும். அக்காயங்களிற்கு நிவாரணமாக உனது ஆடைகள் எரிந்த நேரத்தில் நீ அணிந்த வேப்பிலையே மருந்தாகும். வேப்பிலையை அரைத்துப்பூசியும் வேப்பிலையைக் கொண்டு கொப்பளங்கள்மீது தடவியும் கொப்பளங்கள் உள்ளவரை அதன்மீது வேப்பிலையினால் வீசிவந்தாலே காயங்கள் குணமடையும் என கூறி அருளினார்.

சிவபெருமானிடமும் உமாதேவியரிpடமும் முத்துக்களுடன் வரத்தையும் வாங்கிய முத்துமாரியம்மன் தான் வாங்கின முத்தை யாருக்கேனும் எறிந்து பார்க்க விரும்பினாள. அப்பொழுது எங்கும் நிறைந்திருக்கும் சிவபெருமானே அவளிற்கு முன்னே தெரிந்தார். ஒரு பிடி முத்தை எடுத்த அவள் அவைகளை அவரை நோக்கி வீசி எறிந்தாள. சிவபிரானுடைய உடலும் முத்துப் போன்ற கொப்பளங்கள் எழுந்தன. அவரும் முத்துமாரியம்மனை நோக்கி

“ஈஸ்வரியே முத்துமகாமாரியம்மனே
பருமார்பில் முத்தையள்ளிப் பாராமலே எறிந்தாய்
பட்டமுத்து செய்வருத்தம் தாங்கலையே தாங்கலையே
வரைபோலும் கொங்கைமின்னும் மாலிமயன்புத்திரியே
மானிடர்க்கு முத்தெறியும் வண்ணமினி நாமுரைப்போம்!...
நிறைவாகத் தவமிருப்போர் நித்தியமும் பூசைசெய்வோர்h
நீதிதவறாதுலகம் மாளுமரசர்
பரைபாதம் பூசைசெய்வோர் பக்தியுடன் தான் துதிப்போர்
பாலகர் விருத்தர் அறம் மேலிவியிருப்போர்
கரைகானச் சைவமறை கற்றுனர்ந்த வேதியர்கள்

கற்புநெறி தவறாத பத்தினியம் பெண்டிர்களும்
தரைவாயச் சதாசிவத்தை சார்ந்து நின்ற ஞானிகட்கும்
தற்பரையே முத்துவிளையாடல் தவிர்த்திடுவாய்!

சதிகேடர் துர்ச்சனர்கள் சண்டாளர் பாதகர்மேல்
தாங்கவெண்ணா முத்தையள்ளி ஓங்கியெறிவாய்
பத்தினியை உத்தமரை பண்புகெடப்பேபேசினோர்க்கு
பால்நிறைந்த முத்தையள்ளி வீசிஎறிவாய!

என்று இன்றும் பலவும் கூறிய சிவபிரான்

வாலைபுவனே}வரியே மாரிமுத்து நாயகியே
மாநிலத்தில் முத்துவரம் யாவுமளித்தோம்
பூவுலகமீது சென்று புலல்லர்களைச்சங்கரித்து
பூபாரம் தீருமென்று நாதருமே வாய் மொழிந்தார்!

இவ்விதம் சிவபிரானும் வரம் கொடுக்கவெ மாரியம்மனும் தனது சுவாசத்தினால் ஒன்பது கோடி சக்திகளை உண்டாக்கி அவைகளுடன் உலகைச்சுற்றி வரத்திட்டமிட்டாள். அவள் தேவதச்சனான விஸ்வகர்மாவை அழைத்து அழகிய தேர் ஒன்றைச்செய்து அதில்லேறி தெற்கு நோக்கிப் புறப்பட்டாள்

பொற்கரக நீரெடுத்தாள் பொற்பிரப்பங் கோலெடுத்தாள்
பொன்னனையாள் அம்மனையைக் கையோட தானெடுத்தாள்
வேப்பிலையைக் கைபிடித்தாள் வெண்ணீற்றுப் பையெடுத்தாள்
மெல்லி நல்லாள் கண்ட சரமாலையும் தானெடுத்தாள்

ஆர்ப்பரிக்கும் பொன்னுடுக்கை தார்ப்பரியமாயெடுத்தாள்
யாவருமே மேல் நடக்க விடைகொடுத் தருளி வந்தாள்!....

இவ்வாறு தேவகணங்கள் புடைசூழ பூவுலகை நோக்கி வந்தாள. ஈரேழு பதினொட்டு உலகங்களையும் கடந்து பூமியை நெருங்கும் வேளையில் இறுதியாக பாரிய சமுத்திரம் குறுக்கிட்டது. மீண்டும் விஸ்வகர்மாவை அழைத்து "அச்சமுத்திரத்தைக் கடப்பதற்கு கப்பல் ஒன்றைக் கட்டும் படி கேட்டார்" அப்படியே விஸ்வகர்மாவம்

வேதத்தை - ஏராவாகவும்
ஆகமத்தை – உத்திரங்களாகவும்
புராணத்தை - பலகைகளாகவும்
நவக்கிரகங்களை – பாய்மரங்களாகவும்
நாட்களினை - பாய்களாகவும்
கோள்களினை - கயிராகவும்
நட்சத்திரங்களை கப்பல் தளபாடங்களாகவும்

கொண்டு கப்பல் ஒன்றைச் செய்து கொடுத்தார்!
இதனையே
சீரிலங்கு மாரிசக்தி – தச்சன்
செய்த கப்பல் பார்த்துகந்த
தாரிலங்கு தச்சனுக்கு – அம்மன்
தங்கமணிப் பரிசயளித்து
கூறிலங்கு விழிமடவாள் - அம்மன்
கொடிமுத்துப் பொடிசுமத்தி
பாரிலங்கு பரிகலங்கள் - யாரும்
பயணம்வர விடைகொடுத்தாள்!..........

விடைகொடுத்தே பயண பேரிகை முழங்கி
வெற்றிமுரசதிரவே விருதுகளும் பிடித்து
படைபிடித்தே கோடி பரிகலமும்சூழப்
பதினெட்டுப்பிரிவெனவே முத்துக்களுமேற்றி
நடைபிடித்தே பரிநி மாலுமியுமாக
நந்திசுக்கானியாய் வந்து படகேறி
தடையற்ற தண்டையில் கிலாசுகளமைத்து
தையல்நல்லாள் கப்பல் பாயெடுத்தோடுவாளே!..........

என கப்பற்பாட்டு கூறுகிறது

இவ்வாறு பாய்விர்pந்து பூமியை நோக்கி வந்த கப்பலில் முதலில் காசிக்குச் சென்று அங்கே மணிகர்ணிகைத் தீர்த்தத்தில் நீராடினாள். பின்பு காசி விஸ்வநாதரையும் விசாலாட்சியையும் வணங்கி மறுபடியம் அங்கிருந்து புறப்பட்டு மாயாபுரத்திற்கு வந்தாள் அங்கிருந்து காஞ்சிபுரத்திற்கு ஏகினாள். அங்கே கோயில் கொண்டருளியிருக்கும் ஏகாம்பரநாதரையும் காமாட்சிஅம்மனையும் வணங்கி அவர்கள் அருளிய வரத்தடன் காஞ்சிபுரத்திலே கோயில் கொண்டாள் இதனையே

கொம்பனாள் பெறத்தெய்வத் திருவுருக்கொடுத்துக்
கம்பனார்மலை மகளொடுங் கரந்தருள் செய்தார்
வம்புவார் சூழ இரேணுகை மடந்தை யப்பொழுதே
அப்புவிக்கொரு தெய்வமாயினாளம்மா!.....

காதார வணியினாள் பல வகையினால் கையினாள்
போதராசன் முதற் பலகணமும் புடைசூழ
வேதராசிகள் பயில் விரிபொழுதிற் காஞ்சியின்
மாதராய்யாளிடைத் தெய்வமாய் வைகினாள் !.....

என காஞ்சிபுராணம் இரேணுகைபடலத்தில் சிறப்பித்துக் கூறுகின்றது

(இவ்வாறு காஞ்சியிலே முதல் கோயில் கொண்டதெய்வமே "மாரியம்மன்"ஆகும். என மாரியம்மன் மான்மியம் கூறுகின்றது. இவ்வாறே பின் நாட்களில் இந்தியாவின் வேறுபல இடங்களிற்கும் இலங்கைக்கும் சென்று ஏழைகளுக்கு அருள் பாலித்து வரும் சக்தியின் வடிவமே மாரியம்மன் ஆகும்.

மாரியம்மன் லரலாறு கூறும் இப்பகுதி "மாரியம்மன் மான்மியம்" என்னும் நூலைத் தழுவியும் சுருக்கியும் எழுதப்பட்டது
மாரியம்மன் மான்மியம் என்னும் இந்நால் மட்டக்களப்பு தாமரைக்கேணியைச் சோந்த பண்டிதர். ஆறுமுகம் சபாபதி என்பவரால் எழுதப்பட்டதாகும். வியாசபாரதம் வான்மீகிஇராமயணம, துளசிஇராமயணம், சிவபுராணம், மச்சபுராணம், சூரியபுராணம், விநாயகபுராணம, கூர்மபுராணம், இலிங்கபுராணம், விஸ்ணுபுராணம், பாகவதம், வில்லிபாரதமம, பாரதவசனம், கம்பராமயணம், கந்தபுராணம், காஞ்சிபுராணம், மற்றும் மாரியம்மன்காவியம, மாரியம்மன்அகவல், மாரியம்மன்குளிர்த்தி, மாரியம்மன்உற்பத்தி, போன்றநூல்களின் உதவியுடன் கிராமப்புறக்கதைகள. மாறியம்மன் பற்றியபல கட்டுரைகள் மந்திரங்கள் என்பவற்றின் மீதான நீண்ட நாள் ஆராட்சியின் பின தொகுக்கப்பட்ட அரிய நூலே மாரியம்மன் மான்மியம் என்னும் இந்நூலாகும்.

மாரியம்மன் வழிபாட்டின் வரலாறு பற்றி இந்தியாவிலும் ஈழத்திலும் எழுந்த நூல்களிலே முதன்மையான முழுநூல் இதுவேயாகும்)

(சமதக்கினி முனிவர் இரேணுகையுடன் வாழ்ந்த இடம் சக்தியின் படைவீடுகளில் ஒன்றான படவேடு எனப்படும். இது வடஆர்காடு மாவட்டத்தில் வேலூருக்கும் போளூருக்கும் இடையே உள்ளது. இதுபோலவே வேலூர் மாவட்டத்தில் காணப்படும் வெட்டுவ(h)னம் என்ற இடத்திலேயே பரசுராமர் தன் தாயான இரேணுகையின் தலையை வெட்டிய இடமென்றும் தமிழ்நாட்டில் நம்பப்படுகின்றது)

சிவபுராணத்தில் முத்துமாரியம்மன்

சிவபுரணத்தில் இச்சம்பவம் வேறு விதமாக குறிக்கப்பட்டுள்ளது அது பின்வருமாறு -----------
பிருகு வம்சத்தில் தோன்றிய உருத்திரனின் அம்சமான ஜமதக்கினி(ஜமஅக்கினி)முனிவர் முன்னொரு காலத்தில் தவம் இயற்றி வந்தார். அக்காலத்தில் வியப்ப நாட்டை இரைவரதராசன் என்பபன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரேணுகை என்னும் அழகான மகள் இருந்தாள். பிருகு முனிவரின் தந்தையான பிரம்மாவின் அருளால் உமாதேவியாரின் அம்சமாகவே இவர் அவதரிததிருந்தார். அரசிளம்குமாரியான இரேணுகை ஜமதக்கினி முனிவரை மணம் செய்து கொள்ள விரும்பி பலநாட்களாக அவரை வற்புறுத்தி வந்தார். இவ்வாறான நாள் ஒன்றில் கோபமுற்ற ஜமதக்கினி முனிவர் தனது சீடர்களை அழைத்து இரேணுகையைக் கொண்றுவிடும்படி கூறினார் ஆனால் போரில் ஜமதக்கனி முனிவரின் சீடர்களைக் கொன்று இரேணுகையே வெற்றிபெற்றாள் இதனால் மேலும் கோபமுற்ற முனிவர் தானே இரேணுகையுடன் போரிட்டார். இரேணுகையோ காட்டின் பல பகுதிகளுக்கும் முனிவரை அலையவிட்டு ஓரிடத்தில் தனது தலைமட்டும் சிலையாகத் தெரியும் வண்ணம் புதரில் மறைந்து கொண்டாள். அச்சிலையைக் கண்ட முனிவரும் இரேணுகையை சிலையாகவே இருக்குமாறு சாபமிட்டார், எனினும் சக்தியின் அம்சமான இரேணுகையிடம் அச்சாபம் பலிக்கவில்லை, பின்னர் முனிவரும் மனம் மாறி இரேணுகையுடன் சமரசம் செய்து அவளை மணந்து கொண்டார், அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன.

இரேணுகை நாள்தோறும் காலையில் எழுந்து கணவரின் வழிபாட்டிற்கு கங்கையில் நீர் எடுத்து வருதல் வழக்கம். தனது கற்பின் சக்தியால் தினமும் புது மண்ணில் குடம் செய்து அக்குடத்திலே கங்கை நீரை ஆச்சிரமத்திற்கு எடுத்து வருவாள். இந்நிலையிலேயே கார்த்தவீரியன் நிழலை நீரிலே கண்டு தடுமாறிய இரேணுகை வழமைபோல புதுமண்ணால் குடம் செய்ய முயன்றாள், ஆனால்

முடியவில்லை. பிறஆடவனின் நிழலைக்கண்டு தடுமாறியதால் இவ்வாறு நிகழ்ந்தது. இதனால் முனிவரின் வழிபாட்டிற்கு தேவையான நீரினை எடுத்து வரமுடியாமல் வெறும் கையுடன் ஆச்சிரமத்திற்கு திரும்பினாள்

ஞானக்கண்ணால் நடந்ததை அறிந்து கொண்ட ஜமதக்கினி முனிவர் தனது நான்காவது மகனான பரசுராமனை அழைத்த கற்பு நெறி தவறிய இரேணுகையின் தலையை வெட்டுமாறு கூறினார். தந்தையின் சொற்படி கொலைக்களத்தில் வைத்து தனது தாயாரின் தலையை வெட்டிய பரசுராமன் தாயாரின் தலையை வெட்டிய கவலை மாறாமல் தாயைவெட்டிய தனது வலது கையையும் வெட்டிக் கொண்டார்.

தனது கட்டளையை சிரமேற்றுக் கொண்டு தாயின் தலையை வெட்டிய மகனது செயலை மெச்சிய ஜமதக்கினி முனிவர் பரசுராமனை நோக்கி உனக்கு யாதுவரம் வேண்டும் எனவினாவினார்? தந்தையை வணங்கிய பரசுராமன் தனத தாயை உயிரோடு எழுப்பித்தர வேண்டுமென வேண்டினார் முனிவரும் வெட்டுண்ட பரசுராமனின் வலது கையை உடலுடன் சேர்க்குமாறு கூறினானர். உடனேயே வெட்டுண்ட பாகம் உடலுடன் இணைநத்தாயிற்று. அவ்வாறே இரேணுகையுடைய தலையையும் வெட்டுண்ட உடலுடன் சேர்க்குமாறு கூறினார். பரசுராமனும் கொலைக்களத்திற்கு சென்று தாயின் தலையை எடுத்து அங்கு இரேணுகையின் உடல் போல் இருந்த புலைச்சியின் உடலென்றுடன் தாயின் தலையைச் சேர்க்கவும் அவ்வுடலும் இரேணுகையின் தலையுடன் உயிர் பெற்று எழுந்தது.

சிலகாலம் சென்றதும் ஜமதக்கினி முனிவர் காலமானார். முனிவரின் உடலைத்தகனம் செய்யும் போது இரேணுகை உடன் கட்டை ஏறினாள். இதையறிந்த இந்திரன் இரேணுகை இவ்ப்பூவுலகில் இறவாமல் இருந்து மக்களிற்கு நன்மை செய்ய வேண்டும் என்பதால் புனித நீரைப் பொழிந்து சிதைநெருப்பை அணைந்து போகும்படி செய்தான். எரியும் சிதையில் ஏறியதால் இரேணுகையின் ஆடைகள் எரிந்து விட்டன. உடல் முழுவதும் கருகி தீக்கொப்பளங்களுடன் எழுந்த இரேணுகை வேப்பிலையால் உடலை மூடியபடி வண்ணான் ஒருவனிடம் புதிய ஆடைகளைப் பெற்று அவைகளை அணிந்து கொண்டு அருகிலிருந்த புலைச்சேரிக்குச் சென்று தனது பசிக்கு அவர்களிடம் உணவு கேட்டாள். அப்போது அவர்கள் நாங்கள் புலையர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தம்மிடம் புதிய உணவு இன்மையால் தம்மிடம் இருந்த மீன் குழம்புடன் கூடிய அன்னத்தைப்படைத்தனர். பசியோடிருந்த இரேணுகையும் அப்பழைய மீன்களை வெங்காயமாக மாற்றி உண்டார் (இன்றும்கூட வெங்காயம் மிளகாய் தயிர் என்பன கலந்த தயிர்ச்சாதமே

முத்துமாரியம்மனுக்கு படைக்கப்படும் உணவாகும்) இவ்வாறு மீனை வெங்காயமாக மாற்றி உண்டதைக் கண்ட புலையர்கள இவள் அந்தணப்பெண் இவளுக்கு நாம் அவித்த உணவுகள வழங்கக்கூடாது என எண்ணி அரிசி மா பழம் நீர் மோர் போன்ற பானங்களைப் படைத்து உண்ணச் செய்தனர். உணவை உண்ட இரேணுகையும் தேவர்கள் புடைசூழ சிவபிரானிடம் சென்றார் "சிவபெருமானும் இரேணுகையைப்பார்த்து" நீ சக்தியின் அம்சமுடையவள் இறப்பதற்கு உடையவள் அல்ல! அதனால் இவ்வுடலுடனே இருந்து மக்களைக்காப்பாற்று எனவும் ஜமதக்கினியை மணக்குமுன் புதருக்குள் சரீரத்தை மறைத்து தலைமட்டும் தெரியும்படி செய்தாய் அவ்வண்ணமே எப்பொழுதும் இருந்து மக்களைக் காப்பற்றி வருக என அருள் கொடுத்தார்.

புராணங்களின் ஊடாக தொகுக்கப்பட்டமையால் மாரியம்மன் வழிபாட்டின் வரலாற்று காலங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. முன்னர் தமிழ் நாட்டில் வழங்கி வந்த தாய்தெய்வ வழிபாட்டின் ஒரு அம்சமாகவே இவ்வழிபாட்டினையும் நாம் கருதலாம். கிருஸ்துவிற்கு இரண்டாம் நுற்றாண்டின் பின்னரே இம் மாரியம்மன் வழிபாடு எமது சமூகத்தில் பரவியுள்ளது என்பது நிதர்சனமான உண்மை. ஏன் எனில் சேர சோழ பாண்டியர் என்றும் தமிழ் அரசர்களின் காலத்தில் எழுந்த எந்த சங்கப்பாடல்களிலுமே "மாரியம்மன" என்னும் எக்குறிப்பும் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை ஆனால் சங்க காலத்தின் இறுதியில் எழுந்த சிலப்பதிகாரத்தில் கொற்றவை, வனசாரினி, மதுராபதி, ஐயை, என பெண் தெய்வங்களைப்பற்றிய வர்ணனைகள் பல காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் கதைகளில் ஒன்றான 11வது கதையான காடுகான் கதையின் 14வது பிரிவான "ஐயை கோட்டம் அடைதல்" (ஐயை என்னும் ஒரு பெண் தெய்வத்தின் கோட்டமாகிய கோயில்) என்னும் பகுதியில் 9வது 10வது வரிகளாகக் காணப்படும்

ஆரிடை அத்தத்து இயல்குநர் அல்லது
"மாரி" வளம்பெற வில்வோர் உழவர்

என்னும் அடிகளில் காணப்படும் "மாரி" என்பது மழை வளத்தினைப் பெறாத இடத்தில் வாழ்பவர் ஆயினும் தமது வில்லாண்மையால் அனைத்தினையும் பெற்றுக் கொள்பவர். என்னும் பொருளிலேயே குறிப்பிடப்படுகின்றது. இப்பாடலைத் தொடர்ந்து வரும் "கொற்றவை அருளினன்" என்னும் பாடலிலும் கொற்றவை பற்றிய பல வர்ணனைகள் தொடர்ந்து காணப்பட்ட போதும் மாரியம்மன் என்றோ அல்லது மாரியம்மன் பற்றிய எக்குறிப்பும் இல்லை. இதன் மூலம் சிலப்பதிகாரத்தினை தொடர்ந்து எழுந்த பல புராணங்களில் ஊடாகவே மாரியம்மன் வழிபாடானது தமிழ் சமூகத்தில் பரவியுள்ளமை கண்கூடானது.

எப்படியாயினும் சிலப்பதிகாரத்தையடுத்து எழுந்த கண்ணகி வழிபாடும் அதனைத் தொடாந்து வந்த மணிமேகலை வழிபாடும் நெய்தல் நிலமக்களான கடல் வணிகர்களின் வழிபாடாக வெளிவந்து ஈற்றில் மாரியம்மன் வழிபாடாக மாற்றம் அடைந்திருக்கலாம்.....! எனக்கருத இடமுண்டு. இவ்வாறான கோவலன் கண்ணகி கதை கூறும் "சிலப்பதிகாரத்தின்"சுருக்கம் பின்வருமாறு.

சிலப்பதிகாரம்

திருமாவளவன் எனப்போற்றப்பட்ட கரிகாலனின் ஆட்சிக்காலத்தில் கி.பி 150-175 வரையிலான காலப்பகுதியில் சோழமன்னர்களின் தலைநகரமாக விளங்கியது. காவிரிப்பூம்பட்டினமாகும். இதனை புகார் என்றும் பூம்புகார் என்றும் அழைப்பர். இந்த நகரம் காவிரி கடலில் கலக்கும் இடத்திற்கு வடக்காக அமைந்திருந்தது. இந்நகரம் பட்டினப்பாக்கம், மருவூர்பக்கம், என இரண்டாகப் பிரிந்திருந்தது. இடைநடுவில் நாளங்காடி என்னும் தோட்டமும் அமைந்திருந்தது. இயற்கையிலேயெ காவிரியாற்றின் இந்த முகத்துவாரம் ஆழமாகவும் அகலமாகவும் அமைந்திருந்தமையால் அங்கு வந்த கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமலும் பாரங்களைக் குறைக்காமலும் ஆற்றுவழியினால் துறைமுகத்தையடைந்தன. இதனை புறநானுறு 30ஆம் பாடலில்

"கூம்போடு.........................
மீப்பாய்களையாது மிசைப்பரந்தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்"

என உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்பவர் பாடுகிறார்

இவ்வாறு சிறந்த துறைமுகப்பட்டினத்தில் பல நாட்டினின்றும் வந்த பழமோழி பேசிய கப்பல் ஓட்டிகளும் கப்பல் வணிகர்களும் ஒன்று கூடுவர். இதனையே பட்டினப்பாலையின் 216-218 வது அடிகளில்,

"மொழிபல பெருகிய பழிதீர்தே எத்துப்
புலம்பெயர்மாக்கள் கலந்தினிதுறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்"

என கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகிறார்.
இதனையே இளங்கேவடிகள் சிலப்பத்காரத்தல் இந்திர வழா எடுத்த காதையின் 11ஆம் 12ஆம் அடிகளில் பின்வருமாறு கூறுவார்.

கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்
கலந்தினி துறையும் இலங்குநீர் வரைப்பு

இக்கடலோரப்பட்டினத்தில் இறக்குமதியான பொருட்களைப்பற்றியும்

நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும்
காலின் வந்த கருங்கறிமுடையும்
வடமலைப்பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்
தெறிகடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கைவாரியும் காவிரிப்பயனும்
ஈழத்துணவும் காழகத்தாக்கமும்
அரியவும் பெரியவம் நெரியாஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு!

எனபட்டினப்பாலை தனது 185-193 அடிகளில் விபரணம் தருகின்றது. எனினும் ஈழம் ஆகிய எமது மண்ணில் இருந்து காவிரிப்பூம்பட்டினத்துக்கு அனுப்பப்பட்ட உணவு எதுவென தெளிவாக இங்கு ஏதும் கூறப்படவில்லை. ஆனால் அப்பாட்டில் 29-30ஆது அடிகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

“வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லோடுவந்த வல்வாய்ப்பஃறி”

மேற்கூறப்பட்ட கருத்தாக வெள்ளை உப்பின் விலையைக் கூறிக் கொண்டு நெல்லோடு வந்த “வல்வை” யின் படகு என்பதே சரியானதாகும்.

கொள்ளை = விலை வல்வாய் = வல்வை
சாற்றி = கூவி பஃறி = படகு

எனப் பொருள்படும். இதன் மூலம் சங்க காலத்தில் ஈழத்தில் இருந்து தமிழகத்திற்கு நெல் மற்றும் அரிசியும் உப்புமாகிய உணவுப்பொருட்கள் ஏற்றுமதியாகியுள்ளதை அறியமுடிகின்றது.

இங்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடப்பட்டிருக்கும் இப்பாடல்களின் மூலம் காவிரிப்பூம்பட்டினம் கடல் வணிகர்களின் வாழ்விடமாகவே சிறப்புற்று விளங்கியள்ளது. அதேசமயம் ஈழத்தின் ஒருபகுதியாக வல்வை என்னும் வல்வெட்டித்துறை கடல் வணிகர்களும் காவிரிப்பூம்பட்டினத்துடன் அக்காலத்திலேயே வணிகத் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளதை நாம் அறிய முடிகின்றது இதனைவிட

நாகநீள் நகரோடு – நாகநாடு –அதனோடு
போகம்நீள் புகழ்மன்னனும் புகார்நகர்

எனத் குறிப்பதன் மூலம் புகழ்படைத்த நாகநாட்டிற்கு ஒப்பான புகார் நகரமென சிலப்பதிகாரம் குறிப்பிடுவதை நாம் அவதானிக்கலாம். இதன் மூலம் ஈழம் என்ற நாக நாட்டில் அமைந்திருந்த நகரமானது புகார் நகரத்திற்கு இணையானதாக அமைந்து இருந்ததனை நாம் அறயலாம்.

இவ்வாறு கடல் வணிகத்தில் மிக உயர்நிலையை அடைந்திருந்த புகார் நகரத்தில் கடல் வணிகத்தில் சிறப்புற்று விளங்கிய சிலரை மன்னன் கரிகாலன் தனது நாட்டின் தலைமைக்குடிகளாக உயர்த்தி சிறப்புச் செய்திருந்தான். பரதவர்கள் என அழைக்கப்பட்ட கடலோடிகள் நிறைந்து காணப்பட்ட இந்நகரத்தினை “இளங்கோ” அடிகள் தனது சிலப்பதிகாரம் “மனையறம் படுத்த காதை” யில்

“ உரைசால் சிறப்பின் அரைசுவழை திருவின்
பரதர் மலிந்த பயங்கொழு மாநகர்”

எனப்பாடுகின்றார். இப்பரதவர்களில் ஒருவரே “மாசாத்துவன்” ஆவான் மா என்பது பெரிய என்ற பொருளில் தோன்ற சாத்து என்பது வணிக என்னும் அடியாகப்பிறந்து பொருள் தரும் மாசாத்துவன் என்பவனுடைய மகனே கோவலன் ஆகும்.

“பெருநிலம் முழுது ஆழும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக்குடிகளோடு உயர்ந்து ஓங்கும் செல்வத்தான்
வருநிதிபிறர்ருக்கு ஆர்த்தும் “மாசாத்துவன்” என்பான
இருநிதிக்கிழவன் மகன் - ஈhஎட்டு ஆண்டு அகவையான்--------
---------- கொண்டு ஏத்தும் கிழமையான் கோவலன் என்பான்”

என கோவலனைச் சிலப்பதிகாரம் சுட்டுவது இங்கு கவனிக்கத்தக்கது இதுபோலவே

“ மாகவான் நிகர்வண்கை “மாநாய்கன்” குலக்கொம்பர்
ஈகைவான் கொடி அன்னால் - ஈர்ஆண்டு அகவையாள்

மாதரார் தொழுதுஏத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலால்! பெயர்மன்றும் கண்ணகி என்பாள்”

என கண்ணகியையும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் மாநாய்க்கன் பல நாவாய்களிற்கு (கப்பல்) அதிபதியானவன் ஆதலினால் மாநாய்க்கன் என சுருக்கமாக அழைக்கப்பட்டான்.

மேற்கூறியது போன்று புகார் நகரத்தில் உயர்நிலையை அடைந்திருந்த இருபெருங்குடும்பங்களும் கோவலன் கண்ணகி திருமணத்தின் மூலம் இணைந்து கொண்டன. அதனுடன் கோவலன் கண்ணகி என்னும் இவ்விருவரினதும் குடும்ப வாழ்க்கை மிகவும் சந்தோசமாகவே சில வருடங்கள் கழிந்தன. எனினும் சிலவருடங்களின் பின் மாதவி என்றும் கணிகைக் குலத்தைச் சேர்ந்த ஆடல் நங்கையான மாதவி என்பவளுடன் கோவலனுக்கு தொடர்பு உண்டாயிற்று. இதன் காரணமாக அவன் தனது வியாபாரத்தில் நாட்டமில்லாது மாதவிஎனும் மையலில் மயங்கிக் கிடந்தான் தனது வனிகம் உட்பட அணைத்து செல்வங்களையும் இழந்தான் சில காலத்தின் பின் மாதவியைப்பிரிந்து தனது கண்ணகியிடமே வந்து சேர்ந்தான்

தனது தொழிலையும் அதனால் கிடைத்த அளவற்ற செல்வத்தையும் இழந்து வெறுங்கையுடன் வந்த கோவலனிடம் கண்ணகி தன்னிடம் மீதியாக இருந்த இரண்டு காற்சிலம்புகளையும் கொடுத்தாள். அவைகளைப் பெற்றுக் கொண்ட கோவலன் தனது ம கண்ணகியையும் அழைதைதுக் கொண்டு மதுரைக்கு சென்றான்.

" சிலம்பு முதல் ஆகச்சென்ற கலனோடு
உலர்ந்த பொருள் ஈட்டுதல் உற்றேன்"

அதாவது அச்சிலம்பினை விற்று தனது கடல் வணிகத்திற்கு தேவையான கடற்கலங்கலான கப்பல்களை முதலில் பெறுவேன். அவைகளைக் கொண்டே வியாபாரம் செய்து இழந்த பொருள் எல்லாவற்றையும் தான் ஈட்டுவேன் என்றும் உறுதியுடன் அவன் மதுரைக்கு செல்கிறான். இவ்வாறு இவன் மாதவியை விட்டு பிரிந்து மதுரைக்கு சென்ற நாட்களில் மாதவி அழகான பெண்குழந்தையை பெற்றெடுத்தாள் அக்குழந்தைக்கு பெயரிட அங்கிருந்து வயது முதிர்ந்தவள் முற்படவே மாதவியும்.

இடைஇருள் யாமத்து எறிதிரைப் பெருங்கடல்
உடைகலப்பட்ட எம்கோன் முந்தாள்
புண்ணயதானம் புரிந்தோன் ஆகலின்
நுண்ணுவழி இன்றி நாள்சில நீத்த
இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வோன்

வந்தேன் அஞ்சல் மணிமேகலையான்!..........என
விஞ்சையின் பெயர்த்து விழுமம் தீர்த்த
எங்குலதெய்வப்பெயர் ஈங்கு இடுக என
அணிமேகலையார் ஆயிரம்கணிகையர்
மணிமேகலை என வாழ்த்திய ஞான்று!...........

பெருங்கடலில் இருண்டு கிடக்கின்ற இருளிலே தத்தளித்த கடல் வணிகனான ஒருவனைக்காப்பாற்றிய கடல்தெய்வமான மணிமேகலையின் பெயரை அவளிற்கு சூட்டுக என மாதவி கூறினாள். உடனேசூழ இருந்த கணிகையரும் (பெண்கள்) மணிமேகலை எனக்கூறி அக்குழந்தையை வாழ்த்தினர். இப்பாடலின் மூலம் கண்ணகி வழிபாட்டின் முன்னர் கடல் வணிகர்கள் மற்றும் கடலோர பரதவர்களின் தெய்வமாக மணிமேகலை என்றும் பெண்தெய்வ வழிபாடு உள்ளதனை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

மதுரைக்கு சென்ற கோவலன் கண்ணகியின் பொற்சிலம்பொன்றை எடுத்துக் கொண்டு அதனை விற்று வருவதற்காக மதுரைநகர் வீதிக்கு சென்றான். ஆவ்வீதியில் தனக்கு முன்னால் எதிர்பட்ட பொற்க்கொல்லன் ஒருவனைக் கண்டு சிலம்பினை விற்றுத்தர முடியுமா எனக்கேட்கிறான் ..........................................................

அரன்மனைப் பொற்கெல்லனான அவனும் ஏற்கனவே அரசியுடைய காற்சிலம்பைத் திருடியிருந்ததனால் தனக்கு முன்னால் பொற்சிலம்புடன் நிற்கும் கோவலனை திருடனாக அரசனுக்கு கூறினான். எதனையும் ஆராய்ந்து பார்க்காமல் காவலரை அழைத்து கோவலனை கொன்று அந்த காற்சிலம்பை தன்னிடம் கொணடுவருக என அரசனும் ஆனையிட்டான். அவ்வாNறு காவலரும் அரசனின் ஆணையை சிரமேற் கொண்டு கோவலனைக் கொலை செய்தார்கள். இதனை அறிந்த கண்ணகி கோபமும் கவலையும் மேலிட பாண்டிய அரசனுடைய அரன்மனைக்கு வந்து அரசரிடம் நியாயம் கேட்கிறாள். அவ்வேளையில் கண்ணகி தன்னுடைய சிலம்புகளின் அடையாளமாக அவை மாணிக்கக் கற்களை ஊள்ளீடாகக் கொண்டவை எனக் கூறுகின்றாள்.

மன்னவனோ தனது மனைவியுடைய காற்சிலம்புகள் முத்துப்பரல்களைக் உள்ளீடாகக் கொண்டவை எனக் கூறுகின்றான்.

கண்ணகியும் கோவலனிடம் இருந்தது அரசகாவலர் கைப்பற்றிய காற்சிலம்பை வேண்டி அதனை எறிந்து உடைத்தாள். அப்படி உடைக்கவும் உடைந்த சிலம்பில் இருந்த மாணிக்கப்பரல்கள் மன்னவனின் முகத்திலும் தெறித்து விழுந்தன.

உண்மையை அறிந்த பாண்டிய அரசனாகிய நெடுங்செழியனும் தான் அறம் தவறியதை உணர்ந்த அக்கணத்திலேயே சிம்மாசனத்தில் இருந்து விழுந்து இறந்தான். நடந்தவைகளை அறிந்த அவனது மனைவியான கோப்பெருந்தேவி ஆகிய அரசியும் இறந்து போகிறாள். அந்த நிலையிலும் கொபம் மாறாத கண்ணகி பாண்டிய நகரையே எரிப்பேன் என்று கோப உணர்வில் தனது இடது முலையைத் திருகி நகர்மீது எறிந்து மதுரை நகரினையே எரிக்கிறாள்.

மதுரை நகரை எரித்த கண்ணகி அங்கிருந்து மேற்குப்புறமாக நடந்து சேரநாட்டுக்கு வருகிறாள். அங்கிருந்த நெடுவேள் குன்றமெனும் மலையில் எறி பூத்த வேங்கை மரத்தின் கீழ் பதின்நான்கு நாட்கள் கணவனான கோவலனை நொக்கி அழுதுகொண்டே இருந்தாள். பதின்நான்காம் நாள் தேவர்களுடன் வந்த கோவலனுடன் விமானத்தில் ஏறிய கண்ணகி தேவர் உலகம் சென்றாள. இதனைக்கண்ட அந்த அந்த மலைவாழ் குறவர் அவ்விடத்துக்க வந்த சேரமன்னனான செங்குட்டுவனிடம் தாம் கண்டதைக் கூறினர். உண்மையை உணர்ந்து கொண்ட சேரமன்னனும் பத்தினியாகிய கண்ணகியைப் பொற்றி வணங்க வேண்டும் என எண்ணினான்.
சேரன் எண்ணியபடியே இமயமலைக்குச் சென்று கல்கொண்டு வந்து பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு "நெடுவேள்குன்றத்திலேயே கோயில் அமைத்தான. இக்கோயில் இன்று "மங்களாதேவி" கோயில் என அழைக்கப்படுகிறது. கம்பம் என்ற நகருக்கு அண்மையில் சுருளிமலையில் வண்ணாத்திப்பாறை என்னும் பகுதியில் அமைந்துள்ள இக்கோவில் இன்று கேரளமாநில எல்லையில் அமைந்துள்ளது. பண்டைய சேர நாடே இன்று கேரளா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனைவிட பகவதி அம்மன் என்ற பெயரில் கேரளாவில் பத்தினித் தெய்வத்திற்கான வழிபாடு இன்றும் நடைபெற்ற வருகின்றது.

"தெய்வந்தொழாஅள். கொழுநன் தொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து"

"சிலப்பதிகாரம்" கட்டுகரைக்காதையின் முடிவில் காணப்படும் இவ்வெண்பா தெய்வங்களை வணங்குவதை விடுத்தது கணவனையே வணங்கும் பூவுலகப் பெண்ணாகிய கண்ணகி வானுலகத்தெய்வங்களும் தமது தெய்வமாக வணங்கும் இயல்புடையவளாவாள் எனக்கூறுகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது. இவ்வாறே வஞ்சிக்காண்டம் "குன்றக்குரவை"யில்

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே!
தெய்வங் - கொள்ளுமின்" சிறுகுடியீரே!

..............................................
குறிஞ்சி பாடுமின் நறும்புகைஎடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்
ஒருமுலை இழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக்க எனவே.

எனக்கூறி “கண்ணகியை” தெய்வமாக வழிபட ஆரம்பித்தார்கள்.

சேரன் செங்குட்டவனின் சமகாலத்தவனான இலங்கை மன்னன் கஜபாகுவினால் இப்பத்தினித் தெய்வ வழிபாடு இலங்கையிலும் பரவியது எனக் கூறப்படுகிறது. கஜபாகு காமினி என மாகாவம்சத்தில் அழைக்கப்படும் இவனது ஆட்சிக்காலம் கி.பி 171-193 ஆனதென மஹாவம்சத்தை மொழி பொயர்த்த றுடாநடஅ புநபைநச (கெய்கர்) கூறுகிறார். அநுராதபுரத்தை அரசாண்ட போதும் சேரன் செங்குட்டுபவனின் அழைப்பில் இவன் சேரநாட்டுக்கு சென்று திரும்பியது வடபகுதியூடாகவேஅவ்வாறு அவன் திரும்பும் போது பத்து இடங்களில் கண்ணகிக்கு கோயிலை அமைத்தான் அதில் முதலாவது இன்று கந்தரோடை எனவும் முன்னர் கதிரமலையென்னவும் அழைக்கப்பட்ட இடத்திற்கு அண்மையில் அமைந்திருந்த அங்கனாங்கடவை (அங்கன்- அம்மன்) என்று முதலியார் இராசநாயகம் கூறுகிறார். இவன் அமைத்த பத்தாவது கண்ணகிகோயிலே வற்றப்பளை கண்ணகியம்மன் கோயிலாகும் (பத்தாப்பளை) எனவும் கூறப்படுகின்றது.
கி.பி இரண்டாம் நுற்றாண்டில் இவ்வாறு ஆரம்பித்த கண்ணகி வழிபாடு கி.பி ஏழாம் நுற்றாண்டில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சி காலத்தில் நலிந்து போயிற்று. சமணமதம் மற்றும் பௌத்தமதக் கருத்துக்களைக் உள்வாங்கியிருந்த சிலப்பதிகார கண்ணகியால் சைவமத எழுச்சியில் தமிழகத்தில் தாக்குப்பிடிக்க முடியவில்லை. உதாரணம் சிலப்பதிகாரத்தின் இரண்டாவது நாயகியான மாதவி கோவலன் இறந்ததும் தலையை மொட்டையடித்து துறவு பூணுாகின்றாள். பெண்துறவு பூணுவது சைவசமயத்தால் அனுமதிக்கப்படாத ஒன்றாகும்.

ஆனால் பௌத்தமதம் உயர்நிலை அடைந்திருந்த இலங்கையில் கண்ணகி வழிபாடு தமிழரிடையேயும் அதன் மறுவடிவமான பத்தினித் தெய்வழிபாடு சிங்களவர்களிடமும் இன்றும் நிலவுகின்றது. இதே போல ஆரம்பகாலத்தில் பௌத்த ஜாதக் கதைகளில் கடல் தெய்வமாகக் கூறப்பட்ட “தாராதேவியே” பின்னர் தமிழின் இரட்டைக்காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும் அதனைத் தொடர்ந்து எழுந்த மணிமேகலையிலும் மணிமேகலா தெய்வமாக குறிப்பிடப்படுகின்றாள்.

மணிமேகலையின் காப்பியத் தலைவியான மணிமேகலை இறுதியில் காஞ்சி புரம் சென்று அறவணஅடிகளிடம் தர்மசாத்திரம் சகலதையும் கற்கிறாள். தன்னிடம் இருந்த அமுத சுரபியால் அங்கிருந்தவர்களின் பசி அனைத்தையும் தீர்த்து வேண்டுவார் வேண்டுவனவற்றைக் கொடுத்தும் பௌத்த துறவியாகி அங்கேயே உறைகின்றாள். என மணிமேகலை குறிப்பிடுகின்றது. இதனையே "கச்சிமாநகர்" புக்ககாதையின் வரிகளில் கணாலாம்.

"பங்கயப்பீடிகை பசிப்பிணி மருந்தென்றம்
அங்கையினேந்திய அமுதசுரபியை
வைத்து நின்றெல்லா வுயிரும் வருகவென
................................................
பசிப்பிணி தீர்த்த பாவையை யேத்தி.........."

மேற்சொன்னவைகளை உறுதிப்படத்துவது போல காஞ்சிபுரத்தில் வீடுபேறடைந்த மணிமேகலைதான் காமாட்சி ஆலயத்திலுள்ள அன்னபூரணி ஆகும். (குறைவில்லாத உணவைக் கொடுக்கும் தெய்வம் எனப் பெருள்படும்) அட்சயபாத்திரத்தின் மூலம் குறைவில்லாமல் உணவைக் கொடுத்தவள் மணிமேகலை என்பதையும் இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்துடன் காஞ்சி காமாட்ச்சியம்மன் ஆலயம் ஆரம்பத்தில் பௌத்தர்களின் "தாராதேவி" ஆலயமாக இருந்ததாக ஆராட்சியாளர்கள் குறிப்பிடுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இவ்வாறே பௌத்தமதத்தின் கடல் தெய்வமான மணிமேகலை காஞ்சியில் வீடுபேறடைந்தது போல காஞ்சிப்புராணமும் இரேணுகையாகிய மாரியம்மனும் காஞ்சியிலே முதல் கோயில் கொண்டதாகக் கூறுவது கவனிக்கத்தக்கது.

கண்ணகி வழிபாட்டில் கண்ணகிக்கு குளிர்ச்சி செய்வது இன்றும் நடைபெற்று வரும் சிறப்புச் சடங்காகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இது போலவே முத்து மாரியம்மன் கோவில்களிலும் குளிர்த்தி எனக்கூறப்படும் திருவிழா நடைபெற்று வருகின்றமை அவதானிக்கத்தக்கது.

இதைவிட வைகாசிப் பௌர்ணமி அன்று புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம் உட்பட அனைத்து கண்ணகியம்மன் ஆலயங்களிலும் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு செய்வர். அதேநாளில் வல்வெட்டித்துறை முத்தமாரியம்மன் கோவிலில் இரவிரவாக "வழுந்திப்பொங்கல்" என்னும் திருவிழாவும் கண்ணகிஅம்மன் படிப்பும் அன்றைய முக்கிய நிகழ்வாகக் காணப்படுகின்றது இதனைவிட "காண்டாவனம்" எனக்கூறப்படும் அதிகவெப்பம் உடலைத்தாக்கும் சித்திரை மாதத்திலேயெ வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் திருவிழா நடைபெறுகின்றது. திருவிழா முடிந்த இரண்டு

நாட்களின் பின் குளிர்த்தித் திருவிழா நடைபெறுகின்றது. கண்ணகி கோவில்களில் நடக்கும் குளிர்த்திச் சடங்கும் மாரியம்மன் கோவில்களில் நடைபெறும் குளிர்த்தித் திருவிழாவும் ஒரே தன்மையுடையன. வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவிலில் இத்தகைய கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய திருவிழாக்கள் அல்லது சடங்குகள் நடைபெறுகின்றன. ஆனால் கோடிக்கரை முத்துமாரியம்மன்கோவிலில் கண்ணகியை நினைவூட்டும் எந்தசடங்கும் நடைபெறுதில்லை. மாரியம்மனின் வழிபாடானது கோடிக்கரையில் இருந்தே வல்வெட்டித்துறைக்கு வந்ததாக கோயில்தலவரலாறு கூறுகின்றது. கி.பி இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்று விளங்கிய வல்வெட்டித்துறையினூடாகவே கஜபாகு மன்னனின் கடற்பயணம் நடந்ததாக செவிவழிச்கதையுள்ளது. இவ்வகையில் கஜபாகு மன்னனால் வல்வெட்டித்துறையில் ஸ்தாபிக்கப்பட்ட கண்ணகிஅம்மன் ஆலயம் அமைந்திருந்த இடத்திலேயே கோடியாக்கரையிலிருந்து வந்த முத்துமாரியம்மன் கோயில்கொண்டிருக்கலாம் எனக்கருத இடமுண்டு. இதன் காரணமாகவே கண்ணகிவழிபாடும் முத்துமாரியம்மன் வழிபாட்டுடன் இணைந்து வல்வெட்டித்துறையில் காணப்படுகின்றது.

“கோடிக்கரையாள்” ஒரு அனுபவம்

நம்மவளின் சொந்த இடம் கோடிக்கரை. விரும்பி வந்தமர்ந்த இடம் -நம்மூர் தாசிந்தாமணல் பகுதி. நம் மகமாயித்தாயின் சொந்த இடம் தேடிப்போனோம். பூட்டிய சிறிய கோபுரவாசல். பூசகர் விரும்பிய வேளையில் நிறைவுறும் பூசைகள. பெருத்த சிரமத்துடன் பூசகரைத் தேடிப்பிடித்து கோபுர வாசல் திறந்து உளளே போனோம். புட்டணிப்பிள்ளையார் கோவிலின் பழைய மண்டப அமைப்பைக் கொண்ட ஒரு மண்டபம் தொடர்ந்து ஒரு சிறிய மகா மண்டபம். நேராகக் கருவறை. “கிரீச்” என்ற சத்தத்துடன் திறந்து கொண்ட கருவறைக் கதவுகள் சற்றுப் பழையன. உள்ளே இருள்மயம். ஒன்றும் தெரியவில்லை அர்ச்சகர் ஏற்றிய ஒற்றை விளக்கெளியில் மூத்தவளின் தரிசனம் மெய்சிலிர்த்தது. அப்படியே அச்சொட்டாக நம்மவளேதான்.

சிறிய நடுமண்டபத்தின் இடதுபுறம் ஒரு சிறிய திண்ணை. அங்கே எழுந்தருளும் மூத்தவளின் திருவுருவம் பஞ்ச உலோகத்தில் அப்படியே ஆடிப்போனோம். எட்டித்தொடக்கூடிய தூரத்தில் மூத்த முத்துமாரி திருவுருவம் தரிசித்ததில் உடம்பு நடுங்கியது. கண், காது. மூக்கு, மார்பாகங்கள், நான்கு திருக்கரங்கள. வலதுபக்கம் உடுக்கும் வாளும். இடதுபக்கம் அன்னப்பாத்திரமும் சூலமும் தலையின் பின்புறம் ஜொலிக்கும் சுடர்கற்றை. வலது காலை நீட்டி இடது காலை

மடித்தது அமர்ந்துள்ள பக்குவம். அவள் நம்மவளேதான். நம் தாயேதான். நம் தேவியேதான். (இதற்கு மேலாக வார்த்தைகளில் வர்ணிக்கத்தெரியவில்லை) ஒரேயொரு வித்தியாசம் மூலமூர்த்தமும் சரி எழுந்தருளும் விக்கிரகமும் சரி இளையவளான எம்தாயைவிட மூத்தவள் சற்றுப்பருத்த உருவமைப்பு.

ஒரு பூக்கூட இல்லாமல் ஒரு தீபத்துடன் அர்ச்சகர் அர்ச்சனையை நிறைவுசெய்ய அவரோடு பேச்சுக் கொடுத்தோம். "மறைந்த எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்த காலத்தில் அறநிலையத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்த சிறியகோபுரம் - சுற்றுச்சுவரும் புதுப்பித்து வர்ணம் தீட்டப்பட்டுள்ளதாக விபரம் சொன்னார். எதிர்பார்த்த வரலாறு எதுவும் அவருக்குத் தெரியவில்லை. கோபுரவாசலைப் பூட்டிப்பூசகர் புறப்பட்டுவிட்டார். எதுவும் தெரிந்துகொள்ள முடியாத மனநெருடலுடன் வெளியே நடக்கின்றோம்.

வாசலுக்கு அண்மையில் ஓரமாக இருந்த குடிசை வாசலில் இருந்த முதியவருடன் பேசினேன். தெளிவாகப் பேசினார். அவரது வார்த்தைகள் -அவரது தமிழிலேயே "எங்க பாட்டன் எங்கஅப்பன் சொலிலியிருக்கான் உள்ளே இருந்தவள் எப்பவோ எங்கேயோ போய்விட்டாள். ரொம்பக்காலமா பூசை புனக்காரம் எதுவுமோ இல்லாமே பூட்டியே கிடந்துச்சு இப்ப கிட்டக்கைதான் கதவு திறந்து ஒருவேளை பூசை செய்யிறாங்க. உந்தப்பள்ளியும் வீதியும் இப்பவந்தது. இப்ப கொஞ்சம் திருத்தம்" எனக்கு உடம்பு நடுங்கியது. அவள் எங்கும் போகவில்லை. நம்மிடம் தேடி வள்ளத்தில் (வள்ளக்காரனுக்கு அவள் சொன்னபெயர் கயிலைமலை மாதரசி) வந்துவிட்டாள்.

நல்லசெய்தி கேட்டு உச்சிகுளிர்ந்து. மனம் நிறைந்ததும் மீண்டும் திரும்பி கோபுர வாசலைப் பார்க்கிறேன். அம்மா! மூத்தவளே முத்துமார்p! உன் தங்கை அங்கே எப்படி இருக்கிறாள் தெரியுமா? மாட மாளிகை (ஊரின் இரண்டாவது பெரியவீடு) நகைநட்டு (சொந்தமாகவே விதம்விதமான தங்கநகைகள்) வண்டி வாகனம் (திருவுலாப்போக இரண்டு சகடைகள். வேளைக்கு ஒரு வாகனம் - வெள்ளிச்சிங்கம் உட்பட) ஆடை ஆபரணம் (வேளைக்கு ஒரு சேலை ஒருமுறை அணிந்த சேலையைமறுதடவை தொடுவதில்லை) சொந்த பந்தம் ( அப்பப்பா சொல்லிமாளாது) இன்றைய உலகின் எல்லாமூலை முடுக்குகளிலும் பணமும் வசதியும் (அடி ஆத்தா ஊரிலே பெரியபணக்காரி அவளே) ஆனால் நீமட்டும் ... இப்படி.... என கனத்தமனதுடன் திரும்பிய எனக்கு மூத்தவளின் வார்த்தைகள் மானசீகமாக காற்றோடு கலந்து வருகின்றது. "அவள் எங்கிருந்தாளும் நல்லாய் இருக்கட்டும்". நிறைந்த மனதோடு பிரிய மனமின்றி பிரிந்துவருகின்றேன்.

வல்வையூர் அப்பாண்ணா
நன்றி. அம்மன் வரலாறு (2008)

எனது அனுபவம்.

2001ம் ஆண்டு புரட்டாதி மாதம் வல்வட்டித்துறை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு திருவாளர் தண்டபாணிதேசிகர்அவர்கள் கனடா வந்திருந்தார். வல்வட்டித்துறையின் வரலாற்றைத்தேடிக்கொண்டிருந்த நானும் எமது குலதெய்வத்தினை தினம்தினம் ஆராதிக்கும் குருக்களைக்காண விரும்பினேன். புரட்டாதி 20ம் திகதியளவில் அவர் தங்கியிருந்த அவரது சகோதரரான சாமிஅப்பாத்துரையின் வீட்டுக்கு சென்றிருந்தேன். நானும் எனது மனைவி சந்தானலெட்சுமியும் குருக்களுடன் கோவிலைப்பற்றியும் அம்மனைப்பற்றியும் அதன்வரலாறு. அதன்தெய்வஅம்சம். அதன்சக்தி என பலகேள்விகளைகேட்டு அதற்கான பதிலை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்தோம். எமக்கருகே சாமிஅப்பாத்துரை அவர்கள் அமைதியாக எமது உரையாடலைக் செவிமடுத்துக்கொண்டிருந்தார்.

“டேய் எங்கேயடா என்னைத் தேடிக்கொண்டீருக்கிறாய்? “ என அதட்டிய குரலைக்கேட்டு திரும்பிப்பார்த்தோம். அமைதியாக இருந்த சாமிஅப்பாத்துரை கதிரையில் கண்மூடியபடியே ஆடிக்கொண்டிருந்தார். நான் அவரைப் பார்க்கவும் “நீ தேடும்” இடத்தில் இப்பொழுது நானில்லை.! என்னை நீ அங்கே தேடாதே!. நீ தேடுகின்ற இடத்துக்கு வடமேற்குத்திசையில் இப்பொழுது நான்இருக்கிறேன்! எனக்கூறியவர் சிறிதுசிறிதாக அமைதியடைந்தார். கண்திறந்ததும் சிறிது நேரம் என்னை வெறித்துப் பார்த்தவாறே இருந்தார். எனக்கு எதுவும் புரியவில்லை.

குருக்களுடன் உரையாடியபின் நானும் வீட்டுக்குப் செல்ல ஆயத்தமானேன். அப்பொழுது சாமிஅப்பாத்துரை அவர்கள் வாய்திறந்து நடந்ததைக்கூறினார். மூன்று படகுகள் கடலில் செல்வதுபோலவும் அதில்ஒன்றில் சிவத்தசேலை கட்டிய கறுத்தமூதாட்டி ஒருவர்போவது போன்று தான்கண்டதையும் அப்பொழுது தான் என்னசெய்தேன்.? என்ன கூறினேன்.? எனத்தனக்கு தெரியாது எனவும். கூறினார்.

காலஓட்டத்தில் ஓய்வுஅற்ற கனடாவாழ்கையில் மேற்கூறிய சம்பவத்தை மறந்துவிட்டு என்றும் போல் எனது பணிகளில் கவனம் செலுத்திவந்தேன. 2006ம் ஆண்டில் திரு மீனாட்சிசுந்தரம் எழுதிய “வரலாற்றில் வல்வட்டித்துறை” என்னும் நூலின் 46ஆம் பக்கத்தில்

“வல்வட்டித்துறைக்கு மிகச்சமீபமாக தென்னிந்தியக் கடற்கரையின் கோடிக்கரையில் ஒரு முத்துமாரிஅம்மன் கோவில் நெடுங்காலமாய் அழிந்து கிடக்கிறது.வல்வையில் கோயில் உற்பத்தியான காலத்திலேயே அக்கோயில் கைவிடப்பட்டு அழிந்து போயிருக்கலாம் என ஊகிக்கக்கூடியதாக இருக்கிறது.”

படித்ததும் மூளையில் பொறிதட்டியது.! கோடிக்கரையிலும் ஓர் "முத்துமாரிஅம்மன்"

தேடித்த்pரிந்தேன் சிலகாலங்களின்பின் நண்பர் கண்ணனுடைய உதவியால் கோடிக்கரையில் திரு. சீதாராமனைக் கண்டுபிடித்தேன். அவரிடம் மாரியம்மன் கோவிலைப்பற்றி விபரம் கேட்டேன்.

"இருட்டில் நடக்க விளக்குத்தேடிய எனக்கு விடியலே கிடைத்தது." ஆம்

"வல்வட்டித்துறையின் வடமேற்கே கோடிக்கரை"......

அம்மா உன்னைக் கண்டுகொண்டேன் சந்தேகமேயில்லை
அக்காவும் தங்கையுமா? மூத்தவளா இளையவளா?
கேள்வியில்லை எனக்கு. அன்னையே இரண்டுமே நீதான்
கோடிக்கரையும் வல்வட்டித்துறையும் உனது இரண்டுகண்கள்தான்
புரிந்துகொண்டேன்.

வங்கக்கடல்மேவி உயர்ந்திருக்கும் உனது திருப்பாதங்களில் ஒன்று
வல்வைத்துறையிலும் மற்றையது கோடிக்கரையிலும்!........

உன்அருளுடன்
தமிழ்நீ பொன். .சிவகுமாரன்